(சார்பு நீதிமன்றம்) செஞ்சி

ஓ.எஸ்.எண்.**111/2020** நாள்.**24.09.2025**

**2025**ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **24** நாள் வாதி தரப்பு-**3** ம் சாட்சியின் வாக்குமூலம் **1969**ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | மார்கசகாயம் | சாதி | |
| கிராமம் | மேல்மலையனுார் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | **71** |

வா.சா.**3**

குறுக்கு விசாரணை

நான் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்தேன். கடந்த **2013** ம் ஆண்டு ஓய்வு பெற்று விட்டேன். வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் ஒரே ஊரை சேர்ந்தவர் என்பதால் தெரியும். நான் பிரதிவாதி ஏற்கெனவே கையெழுத்து செய்த பிராம்சரி நோட்டை பூர்த்தி செய்தேனா என்றால் இல்லை. புதியதாக தான் எழுதினோம். பிரதிவாதி வாதியிடம் கடன் கேட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் அதைக்காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்கண்டவாறு கடன் கேட்டதாக சொல்லும் தேதி, நேரம், இடம் குறித்து எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் கடன் கேட்டு இருந்தால் மேற்கண்ட விபரங்களை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பிரதிவாதி கடன் கேட்டதாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க இதுவரை எத்தனை புரோநோட்டுகளை பூர்த்தி செய்திருப்பேன் என்றால் வழக்கு புரோநோட்டுகளை மட்டும் தான் எழுதினேன். புரோநோட்டு எழுதுவதற்காக வாதி எவ்வளவு தொகை எனக்கு கொடுத்தார் என்றால் தொகை எதுவும் பெறவில்லை. **27.07.2017** அன்று நான் வாதியுடன் காலை **10** முதல் **10.30** வரை இருந்தேன். அந்த நேரத்திற்கு முன்போ, பின்போ என்ன நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தினம் வாதி பிரதிவாதிக்கு

எழுதிக்கொடுத்த பைசல் இரசீது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நான் உண்மையில் வழக்கு புரோநோட்டை எழுதி இருந்தால் மேற்கண்ட பைசல் இரசீது குறித்து எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் எனவே நான் வழக்கு புரோநோட்டுக்களை எழுதவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி 2-தவணைகளாக கடனை பைசல் செய்வதாக சொன்னார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு வழக்கு புரோநோட்டுகளில் குறிப்பிட்டேனா என்றால் இல்லை. ஒரு புரோநோட்டில் அதிகபட்சமாக எவ்வளவு தொகை குறிப்பிட முடியும் என்றால் அதுப்பற்றி தெரியாது. வாதி எவ்வளவு தொகை கொடுத்திருந்தாலும் ஒரே புரோநோட்டில் எழுதி இருக்க முடியும் என்றால் பிரதிவாதி 2 பாண்டு எழுத சொன்னதால் எழுதினேன். பொதுவாக கடனை திருப்பி செலுத்தும் போது புரோநோட்டின் பின்புறம் வரவு வைக்கலாம் என்றால் சரிதான். வாதி பிரதிவாதியிடம் கடனை எங்கு வைத்து எத்தனை முறை எந்த தேதியில் நேரத்தில் கேட்டார் என்ற விபரங்களை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அது உண்மையாக இருந்திருந்தால் மேற்கண்ட விபரங்களை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் அழைத்து சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் வாதி அழைத்து வந்தேன். நீதிமன்ற நடைமுறை குறித்து எனக்கு தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் வழக்கறிஞர் தயார் செய்தார். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதிவாதிக்கு எதிராக தவறான சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி பிரதிவாதி வாதிக்கு புரோநோட்டு எதுவும் எழுதிகொடுக்கவில்லை என்றாலும் நான் புரோநோட் எதையும் எழுதவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன 27.07.2017 அன்று பிரதிவாதி வாதியிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல.